# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# ஐந்தாம் பத்து

## முதல் திருமொழி - அறிவதரியான்
## திருப்புள்ளம்பூதங்குடி

** அறிவது அரியான் அனைத்துலகும் உடையான் * என்னை ஆளுடையான் *
குறிய மாணி உருவாய * கூத்தன் மன்னி அமரும் இடம் **
நறிய மலர் மேல் சுரும்பார்க்க * எழிலார் மஞ்ஞை நடம் ஆட *
பொறிகொள் சிறை வண்டு இசை பாடும் * புள்ளம்பூதங்குடி தானே 1

கள்ளக் குறளாய் மாவலியை வஞ்சித்து * உலகம் கைப்படுத்து *
பொள்ளைக் கரத்த போதகத்தின் * துன்பம் தவிர்த்த புனிதன் இடம் **
பள்ளச் செறுவில் கயல் உகளப் * பழனக் கழனி அதனுள் போய் *
புள்ளுப் பிள்ளைக்கு இரை தேடும் * புள்ளம்பூதங்குடி தானே 2

மேவா அரக்கர் தென்னிலங்கை * வேந்தன் வீயச் சரம் துரந்து *
மா வாய் பிளந்து மல் அடர்த்து * மருதம் சாய்த்த மாலதிடம் **
காவார் தெங்கின் பழம் வீழக் * கயல்கள் பாயக் குருகு இரியும்*
பூவார் கழனி எழில் ஆரும் * புள்ளம்பூதங்குடி தானே 3

வெற்பால் மாரி பழுதாக்கி * விறல் வாள் அரக்கர் தலைவன் தன் *
வற்பார் திரள் தோள் ஐந்நான்கும் * துணித்த வல்வில் இராமன் இடம் **
கற்பார் புரிசை செய் குன்றம் * கவினார் கூடம் மாளிகைகள் *
பொற்பார் மாடம் எழில் ஆரும் * புள்ளம்பூதங்குடி தானே 4

மையார் தடங்கண் கருங்கூந்தல் * ஆய்ச்சி மறைய வைத்த தயிர் *
நெய்யார் பாலோடு அமுது செய்த * நேமி அங்கை மாயன் இடம் **
செய்யார் ஆரல் இரை கருதிச் * செங்கால் நாரை சென்றணையும் *
பொய்யா நாவின் மறையாளர் * புள்ளம்பூதங்குடி தானே 5

மின்னின் அன்ன நுண்மருங்குல் * வேயேய் தடந்தோள் மெல்லியற்கா *
மன்னு சினத்த மழ விடைகள் * ஏழ் அன்று அடர்த்த மாலதிடம் **
மன்னு முது நீர் அரவிந்த மலர் மேல் * வரிவண்டு இசை பாட *
புன்னை பொன்னேய் தாதுதிர்க்கும் * புள்ளம்பூதங்குடி தானே 6

குடையா விலங்கல் கொண்டு ஏந்தி * மாரி பழுது ஆநிரை காத்து *
சடையான் ஓட அடல் வாணன் * தடந்தோள் துணித்த தலைவன் இடம் **
குடியா வண்டு கள்ளுண்ணக் * கோல நீலம் மட்டுகுக்கும் *
புடையார் கழனி எழில் ஆரும் * புள்ளம்பூதங்குடி தானே 7

கறையார் நெடுவேல் மறமன்னர் வீய * விசயன் தேர் கடவி *
இறையான் கையில் நிறையாத * முண்டம் நிறைத்த எந்தை இடம் **
மறையால் முத்தீ அவை வளர்க்கும் * மன்னு புகழால் வண்மையால் *
பொறையால் மிக்க அந்தணர் வாழ் * புள்ளம்பூதங்குடி தானே 8

துன்னி மண்ணும் விண்ணாடும் * தோன்றாது இருளாய் மூடிய நாள் *
அன்னமாகி அருமறைகள் * அருளிச் செய்த அமலன் இடம் **
மின்னு சோதி நவமணியும் * வேயின் முத்தும் சாமரையும் *
பொன்னும் பொன்னி கொணர்ந்து அலைக்கும் * புள்ளம்பூதங்குடி தானே 9

** கற்றா மறித்து காளியன் தன் * சென்னி நடுங்க நடம் பயின்ற *
பொற்றாமரையாள் தன் கேள்வன் * புள்ளம்பூதங்குடி தன் மேல் **
கற்றார் பரவும் மங்கையர் கோன் * காரார் புயற்கைக் கலிகன்றி *
சொல் தான் ஈரைந்து இவை பாடச் * சோர நில்லா துயர் தாமே 10

**அடிவரவு:** அறிவது கள்ளம் மேவா வெற்பால் மையார் மின்னின் குடை கறை துன்னி கற்றா தாம்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---